7th March 1964]

* 175 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் ஆண்டு தோறும் செல்லும்போது ஏற்படுகின்ற அவர்களது செலவினை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்கிறதா? அல்லது மாநில அரசு ஏற்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This State Government does not bear any expenditure in connection with the visit of Sri R. Venkataraman, Minister for Industries, to the United Nations Organization.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : தமிழக சட்டசபை அங்கத்தினர்களைப் பாராளுமன்ற தூதுகோஷ்டி என்ற முறையில் வெளிநாடுகளுக்கு போய்வர சர்க்கார் வசதி செய்து கொடுக்குமா? ஆம் என்றால் எப்போது? இல்லையென்றால் என்ன காரணம்?

(சில அங்கத்தினர்கள் கை தட்டினார்கள்.)

MR. SPEAKER : Members should not clap hands.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இத்தகைய யோசனை ஒன்றும் இப்போது அரசாங்கத்தினிடத்தில் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், நம்முடைய மாகாணத்தில் சிறு தொழில்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு, அயல் நாடுகளில் எம்மாதிரி சிறு தொழில்கள் எல்லாம் நடக்கின்றன என்பதை போய்ப் பார்த்து வருவதற்காக நமது தொழில் அமைச்சர் அவர்களை அடிக்கடி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நமது தொழில் அமைச்சர் அவர்கள் வேறு அலுவல்கள் நிமித்தமாக வெளிநாடுகளுக்கு செல்லும்போதெல்லாம், அயல்நாடுகளில் சிறு தொழில்கள் மட்டுமல்ல, பெரிய தொழில்கள் இவைகளினுடைய வளர்ச்சியைப்பற்றி கவனம் செலுத்தி வருகிறார்கள். அவ்வாறு கவனம் செலுத்துவதால் அதே முறையை எந்த அளவுக்கு இந்த நாட்டில் அமலாக்க முடியும் என்பதைப்பற்றி ஆலோசிப்பதற்கு வசதியாக இருக்கிறது.

அரிசனங்களுக்கான பால் சொசைட்டிகள்

* 176 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் அரிசனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பால் சொசைட்டிகள் எத்தனை, ஜில்லாவாரியாக?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the Table of the House.

[a] Printed as Appendix on page 498 infra

[7th March 1964

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, மேஜை மீது வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் 122 சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 122 சொஸைட்டிகளில் இன்னும் பல சொஸைட்டிகளுக்கு ஷெட் போடுவதற்கான 4,000 ரூபாய் மான்யத் தொகை இன்னும் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : பால் வினியோக சப்ளை சொஸைட்டிகள் ஏற்படுத்துவதற்கு முதலில் அரசாங்கம் 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கியது. இப்போது இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் பணநெருக்கடிதான் காரணம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இன்னும் பல சொஸைட்டிகளிலிருந்து ப்ரபோசல்களை அனுப்பியிருந்தும் அவைகள் ஸாங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றன. இதற்கு வேண்டிய பணத்தைச் செலுத்தி மூன்று வருடம் மூன்றரை வருடம் ஆகிறது. இன்னும் ஸாங்ஷன் கொடுக்கவில்லை. ஆகவே இதற்குத் தனியாகப் பணத்தை ஒதுக்கி உடனடியாக ஸாங்ஷன் செய்து இவைகளுக்குக் கொடுக்க வேண்டிய ரூ. 4,000 மான்யத் தொகையை கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு சீக்கிரமாக ஸாங்ஷன் செய்து நிதி ஒதுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, பால் வழங்கும் சங்கத்தில் மாடுகளை வாங்குவதற்காக அரிஜனங்களுக்குப் பாதித்தொகை மான்யமாக கொடுப்பது என்கின்ற ஒரு திட்டம் இருந்தது. இந்தத் திட்டம் அரிஜனங்களுக்குப் பெரும் உதவியாக இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய தொகையை மான்யமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போதும் பசு மாடு வாங்குவதற்காக 250 ரூபாய் கடனாகவும் மான்யமாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இப்போது அமலில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது ஆங்காங்கு பல பால் சொஸைட்டிகள் பெருகியிருக்கின்றன. இதைக்கண்டு அரிஜன மக்களும் தங்கள் காலனிகளில் இம்மாதிரி சொஸைட்டிகளை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் இதற்கான பங்குத் தொகை செலுத்த முடியாமல் தயங்குகிறார்கள். ஆகவே இதற்கான பண உதவியை அரசாங்கம் செய்து கொடுக்க வழிவகை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதில் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை மிகவும் சொற்பம். இதைக் கொடுக்க முடியவில்லை என்றால் பால் பண்ணையை ஏற்படுத்த முடியாது. ஆகவே இதைக் கொடுத்துத்தான் தீரவேண்டும்.